## மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண ஒன்றிய பா.ஜ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

# திராவிட மாடல் ஆட்சியில் மீனவர்களுக்கு எண்ணற்ற திட்டங்கள்!

## உலக மீனவர் தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 22– மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண ஒன்றிய பா.ஜ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திராவிட மாடல் ஆட்சியில் மீனவர்களுக்கு எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக மீனவர் தின விழாவில் காணொலி மூலம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.11.2025) கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில், கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி - குமரிமாவட்டமீனவர்கூட்டமைப்புகள் சார்பில் நடைபெற்ற உலக மீனவர் நாள் விழாவில், காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு

கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி அமைப்பும் - குமரி மாவட்ட மீனவர் கூட்டமைப்புகளும் இணைந்து நடத்தும் உலக மீனவர் நாள் விழாவில் உங்களோடு பேசுவதில் மிகவும் மகிழ்ச்சி!

உழைப்புக்கும் உறுதிக்கும் பெயர் பெற்ற மீனவ பெருமக்கள் எல்லோருக்கும் என்னுடைய உலக மீனவர் நாள் வாழ்த்துகள்! இந்த விழாவில் கலந்து கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், சமூகத் தலைவர்கள், உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம்!

கழக அரசுக்கும் மீனவர்களுக்குமான உறவு என்பது நீங்கள் மீன்பிடிக்கப் போகும் கடலைப் போலவே ஆழமானது! அதற்கு எடுத்துக்காட்டுதான், கடந்த 2023-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில், வரலாற்றிலேயே முதல் முறையாக நாம் பிரமாண்டமாக நடத்திய மீனவர் நல மாநாடு! 14 ஆயிரம் பயனாளிகளுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பில் நலத்திட்ட உதவிகளை அந்த நிகழ்ச்சியில் நான் வழங்கியதும், பல புதிய அறிவிப்புகளை வெளியிட்டதும் உங்களுக்கு நன்றாக நினைவிருக்கும்.

அதுமட்டுமா, அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு வந்து, மீனவக் குடும்பங்களின் பாச மழையில் நனைந்ததை நானும் மறக்கவில்லை! கள ஆய்வில் முதலமைச்சர் பயணத்தில் நாகை மாவட்டத்திற்கு நான் வந்தபோதும், நாகை, திருவாரூர், தஞ்சை, மயிலாடுதுறை மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பேசினேன். தொடர்ந்து 2024-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அனைத்து விசைப்படகு சங்க நிர்வாகிகள், ஜூலையில் விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர் சங்க நிர்வாகிகளை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து பேசினேன். இந்த ஆண்டும் பிப்ரவரி மாதம் இராமநாதபுரத்தைச் சேர்ந்த பல்வேறு மீனவர் சங்கத்தினரை சந்தித்தேன். மார்ச் மாதம் நாகை மாவட்டம் நம்பியார் நகரில் மீனவச் சொந்தங்களை சந்தித்து, அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற உறுதியளித்தேன்.

தொடர்ந்து, ஏப்ரல் மாதம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கச்சத்தீவை மீட்க ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றினோம். நம்முடைய எந்தக் கோரிக்கையையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுத்த தயாராக இல்லாத நிலையிலும், நம்முடைய மீனவர்களுக்கு நம்மாலான உதவிகளை நாம்தான் செய்ய வேண்டும் என்று, ஏப்ரல் 7 அன்று

110 விதியின்கீழ் 576 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை மன்னார் வளைகுடா பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்காக அறிவித்தேன். இந்த திட்டங்களை எல்லாம், சரியாக ஒருங்கிணைத்து நிறைவேற்ற வேண்டும் என்று திட்ட கண்காணிப்பு பிரிவு உருவாக்கப்படும் என்றும் அறிவித்தேன்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் குளச்சலில், துறைமுக விரிவாக்கப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று நீங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, அதற்கான 350 கோடி ரூபாயை விரைந்து வழங்க ஒன்றிய நிதியமைச்சருக்கு நான் கடிதம் எழுதி வலியுறுத்தியதும் உங்களுக்கு நினைவிருக்கும். இந்த ஆண்டு மே மாதம், இந்தியாவிலேயே முதன்முறையாக சூரை மீன் பிடிக்க திருவொற்றியூரில் மீன்பிடி துறைமுகத்தை திறந்து வைத்தேன்! அதுமட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்களை திறந்து வைத்திருக்கிறேன்.

கடல் அரிப்பு பாதிப்பைத் தடுப்பதற்கு, உங்கள் கோரிக்கைகளைக் கேட்டு தூண்டில் வளைவுகளை அமைத்து வருகிறோம்! இது எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, உங்களின் மிக முக்கிய கோரிக்கையை ஏற்று, மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையை 5 ஆயிரம் ரூபாயில் இருந்து, 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறோம்! அதுவும் 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்களும் பயனடையும் வகையில், இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின்கீழ் பட்டாக்கள், மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவுக் கடன், ஆயிரம் நாட்டுப் படகு மீனவர்களுக்கு 40 விழுக்காடு மானியத்தில் இயந்திரங்கள், மானிய விலை டீசல் அளவு உயர்வு, மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அலகுத் தொகை உயர்வு என்று ஏராளமான நலத்திட்டங்களை இந்த நான்கரை ஆண்டுகளில் செயல்படுத்தி இருக்கிறோம்! உங்கள் குமரி மாவட்டத்தில் மட்டும், கடந்த 4 ஆண்டுகளில் மீனவர்களுக்காக 567 கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்பு பணிகளை செய்து கொடுத்திருக்கிறோம்!

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளைப் போலவே, திராவிட மாடல் அரசு சார்பில் மீனவர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் பட்டியலும் மிக நீளமானது. இராமேஸ்வரம் வரை வந்தாலும், உங்களை சந்திக்க பிரதமர் நேரம் ஒதுக்கவில்லை என்று உங்கள் ஏமாற்றத்தை பதிவு செய்திருந்தீர்கள். ஆனால், நான் அப்படி இல்லை. கடலோர மாவட்டங்களுக்கு எப்போது வந்தாலும் மீனவர் சங்க பிரதிநிதிகளை சந்திக்கிறேன், உங்கள் வீடுதேடி வந்து உங்கள் குடும்பத்தில் ஒருவனாகதான் நான் இருக்கிறேன். நீங்கள் நினைத்தால் எப்போது வேண்டுமென்றாலும் தலைமைச் செயலகத்திலும் என்னைச் சந்திக்கலாம் என்கிற அளவுக்கு மீனவர்களுக்கு நெருக்கமான அரசாக, நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது!

இப்படி, தொடர்ந்து உங்களின் தொடர்பில் இருந்து, உங்கள் தேவைகளை, கோரிக்கைகளுக்கு செவிமடுத்து, உடனே நிறைவேற்றுபவன்தான் இந்த ஸ்டாலின்! இந்த நல்லுறவு என்றென்றும் தொடர வேண்டும்! இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் சந்திக்கும் இன்னல்கள், உயிரிழப்புகளை தவிர்க்க உறுதியான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு முன்னெடுக்க வேண்டும்! மீனவர்களின் பிள்ளைகள் நல்ல முறையில் படித்து பெரிய பொறுப்புகளுக்கு வர வேண்டும்! நம்முடைய அரசின் திட்டங்கள், கடனுதவிகளை பயன்படுத்தி மீன்வளம் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட தொழில்களிலும் நீங்கள் சிறந்து விளங்க வேண்டும்!

அடுத்த ஆண்டு அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், இன்னும் இன்னும் உங்களின் உயர்வுக்கான திட்டங்களை நான் செயல்படுத்த வேண்டும் என்று என்னுடைய ஆவலை பகிர்ந்துகொண்டு, அதற்கு உங்களின் ஆதரவு எப்போதும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# தி.மு.க. பொறியாளர் அணி காணொலிக் கூட்டம்!

## மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் தி.மு.க. பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன் தலைமையில் இன்று (22.11.2025 - சனிக்கிழமை) காலை 11 மணி அளவில் மாநில நிர்வாகிகள் மற்றும் பொறியாளர் அணி மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ளும் காணொலிக் கூட்டம் நடைபெற உள்ளது.

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

**பொருள்:**

1) தீவிர வாக்காளர் சீர்திருத்த பணியில் வாக்குச்சாவடி முகவர்களுக்குப் பொறியாளர் அணியின் உதவுவது.

2) நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு பொறியாளர் அணியினர் செய்ய வேண்டிய நலத்திட்ட உதவிகள் குறித்து.

3) பொறியாளர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் சமூக ஊடக பயிற்சி முகாம் நடத்துவது குறித்து.

அனைவரும் தவறாமல் காணொலி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

---

## அமைச்சர் மா.சுப்ரமணியன் தலைமை! துணை மேயர் மு.மகேஷ்குமார் முன்னிலை!

# வழக்கறிஞர் வேளச்சேரி வே.ரமேஷ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு!

## ஆர்.எஸ்.பாரதி – தமிழச்சி தங்கபாண்டியன் – இரா.கிரிராஜன் வாழ்த்து!

சென்னை, நவ.22- சென்னை தெற்கு மாவட்ட பிரதிநிதியும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வழக்கறிஞருமான வேளச்சேரி வே.ரமேஷ் குமார் - இர.மீனாட்சி இணையரின் இளைய மகள் வழக்கறிஞர் இர.கவிதா (எ) காவியா - வழக்கறிஞர் இர. ஷங்கரநாராயணன் ஆகியோரின் திருமண வரவேற்பு இன்று (22-11-2025) மாலை 7.00 மணிக்கு சென்னை வேளச்சேரி தண்டீஸ்வரம் சாலையில் அமைந்துள்ள ராஜலக்ஷ்மி திருமண மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்சிக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் தலைமை வகிக்கிறார்.

சென்னை மாநகர துணை மேயர் மு.மகேஷ்குமார் முன்னிலை வகிக்கிறார்.

எஸ்.ஆர்.செந்தில், கே.கே.மோகன், எஸ்.ராமசந்திரன், த.கோ.வெங்கடேசன், ஏ.சக்திவேல், எம்.நாராயணமூர்த்தி, கே.கே.செழியன், எஸ்.லிங்கப்பன் மற்றும் எஸ்.ஜெயராம் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்ற னர்.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன், இரா. கிரிராஜன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

மேலும் மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், ஐ.கென்னடி, பகுதி கழக செயலாளர்கள் இரா. துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆலந்தூர் என்.சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் மின்னல் கந்தப்பன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன் மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.

---

## ஆர்.டி.சேகர் தலைமை! க.ஜெயராமன் முன்னிலை!

# பெரம்பூர் எம்.கோபி இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, நவ.22- பெரம்பூர் தெற்கு - 46வது வட்டம் எம்.கோபி என்கிற கோபால் - ஜி.சரஸ்வதி ஆகியோரின் புதல்வர் ஜி.நதியழகன் - எஸ்.கமலி என்கிற காயத்ரி ஆகியோரின் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (22.11.2025 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு வியாசர்பாடி ஜெ.ஆர். கே. மகாலில் நடைபெறுகின்றது.

இவ்விழாவில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் க.ஜெயராமன், அ.முருகன், இரா.கருணாநிதி, வி.முருகன், வி.வேதா, சி. ஆனந்தி, வை.கௌதமன், பெ. இன்பரசன், கே.ஜெயராஜ், இ. மணிகண்டன், பி.ஆனந்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இ.ஜெயக்குமார், ஆர். சீதா, ஆர்.ரகு, பி.கிருஷ்ணமூர்த்தி, இ.கர்ணா, கே.பிரசாத், எம்.ஜெயகிருஷ்ணன், இ.மணிகண்டன் மற்றும் பலர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மேயர் பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., இரா.நரேந்திரன், எஸ்.ஆர். கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.தமிழ்ச்செல்வன், ப.மதிவாணன், டி. கமலக்கண்ணன், க.அமுல் மற்றும் பலர் கலந்துகொண்டு வாழ்த்துகின்றனர்.

ச.ராஜன், கே.ரங்கநாதன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் – ஆர்.எஸ்.பாரதி அஞ்சலி! பம்மல் வடக்குப் பகுதி

# மாவட்டப் பிரதிநிதி எஸ்.கே.நெப்போலியன் படத்திறப்பு நினைவஞ்சலி நிகழ்ச்சி!

## டி.ஆர்.பாலு எம்.பி. – மீ.அ.வைதியலிங்கம் – இ.கருணாநிதி – எஸ்.ஆர்.ராஜா பங்கேற்பு! பகுதி செயலாளர் த.ஜெயகுமார் அறிவிப்பு!

சென்னை, நவ. 22 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி மாவட்டக் கழக பிரதிநிதியும், அரசு வழக்கறிஞரும், அனகாபுத்தூர் நகரக் கழகத்தின் சார்பிலும், பரங்கிமலை ஒன்றியத்திலும் மாவட்டக் கழக பிரதிநிதியாக தொடர்ந்து 32 ஆண்டுகாலமாக பணியாற்றிய, எஸ்.கே.நெப்போலியன் கடந்த 08.11.2025, சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னாரது திருவுருவப் படத்தை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இன்று (22.11.2025 - சனிக்கிழமை) மாலை 06.30 மணிக்கு திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. நினைவஞ்சலி உரையாற்றுகிறார்.

இதில் கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ. வைதியலிங்கம், இ. கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், பாலவாக்கம் த.விசுவ நாதன், பகுதி செயலாளர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, எஸ்..சேகர், இ.எஸ்.பெர்னாட், ஏ.கே. கருணாகரன், ஆ.நடராஜன்,

மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், புனித தோமையார்மலை ஒன்றிய செயலாளர் ஜி.கே.. ரவி, மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் ஆர். எஸ்.கிருத்திகா தேவி, ஆதிமாறன், இரா.நரேஷ் கண்ணா, வ.விஜயரங்கன், பொன். சதாசிவம், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் க.தேவேந்தி ரன், மு.ரஞ்சன், ஆர்.எஸ்.சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிசந்தி ரன், பி.ஏ.கே.சத்தியபிரபு, பம்மல் வடக்கு பகுதி நிர்வாகிகள் கே.சந்திரன், மு. ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, க.சுந்தரமூர்த்தி, இரா.குமரேசன், இரா.பாபுஜி, வட்டக்கழக செயலாளர்கள் ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சித்ராதேவி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடி கள், பம்மல் வடக்கு பகுதிக்கு உட்பட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர் என பகுதிச் செயலாளர் த. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

---

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – தூத்துக்குடி எஸ்.ஜோயல் ஆலோசனை வழங்குகிறார்கள்!

# சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. அறிக்கை!

சென்னை, நவ. 22 சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இளைஞர் எழுச்சி நாள் இம்மாதம் வரும் 27-ஆம் தேதி அன்றும் அதை தொடர்ந்து நடைபெற இருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்தும், (SIR) சிறப்பு வாக்காளர்கள் திருத்தம் பணியில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணியினர் தீவிரமாக ஈடுபட்டுவது குறித்தும் ஆலோசனைகளை சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. மற்றும் கழக இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் ஆகியோர் ஆலோசனை வழங்குகிறார்கள்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் மதி எம்.சி, எஸ். முரளி ஆகியோரின் முன்னிலையில், எனது தலைமையில் (ராஜா அன்பழகன் எம்.சி) இன்று (22.11.2025, சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, தி.நகர் மேட்லி சாலையில் உள்ள மாவட்ட இளைஞரணி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள் மற்றும் வட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: இளைஞர் எழுச்சி நாள் குறித்தும், SIR பணிகள் குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## அடையாறு ‘முரசொலி’ முகவர்

# எஸ்.ரவிவர்மா - பத்மாவதி இல்லத் திருமணவிழா!

## கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, நவ.22- சென்னை தெற்கு மாவட்டம், திருவான்மியூர் மருதீஸ்வரர் நகரில் வசிக்கும் டி.சுப்பராமராஜீவ் டி.கமலம்பாள் ஆகியோர் பேரனும், அடையாறு முரசொலி முகவர் எஸ்.ரவிவர்மா பத்மாவதி ஆகியோரின் புதல்வர் டாக்டர். டி.ஆர்.மனோஜ்குமார், கள்ளக்குறிச்சி மாவட்டம், உடையார் நாச்சி கிராமம், சி.பாலசுப்ரமணியன்தேவகி ஆகியோரின் பேத்தியும், ஜி.முகுந்தவேல்சுமதி ஆகியோரின் புதல்வி டாக்டர். எம்.மோனிஷா M.D. ஆகியோரது திருமணம் 23.11.2025, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் 5/72, ராஜா நகர், நீலாங்கரை, ECRல் அமைந்துள்ள ராணி மஹாலில் (புகாரி புளூ லகூன்) நடைபெறுகிறது.



இந்நிகழ்ச்சியில் எஸ்.ரவிவர்மா, ஆர்.பத்மாவதி ரவிவர்மா, ஜி.முகுந்தவேல், எம்.சுமதி முகுந்தவேல், எஸ். ரகு, சொர்ணா ரகு, எம். துஷ்யந்த், டி.லாவண்யா, டி.ஆர்.சாய்குமார், டி.ஆர். ஹரினி, டி.கமலம்மா, வி. கோவிந்தராஜீலு, திருமதி. மல்லிகா கோவிந்தராஜீலு, சி.பாலசுப்ர மணியன், தேவிகா பாலசுப்ரமணியன் மற்றும் கழகத் தோழர்களும் முன்னோடி களும், உறவினர்களும் கலந்துகொண்டு வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பு இன்று (22/11/2025, சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு வருகை தருவோரை எஸ்.ரகு, சொர்ணா ரகு, எம்.துஷ்யந்த், லாவண்யா துஷ்யந்த், டி.ஆர்.சாய்குமார், டி.ஆர். ஹரிணி ஆகியோர் வரவேற்கின்றனர்.

---

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண் 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) பணிமனை நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கு தொ.மு.ச. பேரவையின் பொருளாளர் **திரு. கோ.சி.வள்ளுவன்** அவர்கள் மேலிடப் பார்வையாளராகவும், வழக்கறிஞர் **திரு. அ.சரவணன்,** கழக தணிக்கைக் குழு உறுப்பினர் அவர்கள் தேர்தல் ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டு தேர்தல் கால அட்டவணை 18.10.2025 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி வேட்பு மனுக்கள் பெறப்பட்டு பரிசீலனை முடிந்த நிலையில் சில நிர்வாக காரணங்களால் மறு அட்டவணை வெளியிட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்டவாறு மறு அட்டவணை வெளியிடப்படுகிறது.

**பணிமனை நிர்வாகிகள் தேர்தல்**
**தேர்தல் கால மறு அட்டவணை**

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனை வாரியாக) - 08.12.2025 காலை 11.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் - 18.12.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள்தோறும்) - 25.12.2025 காலை 11.30 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு (பணிமனைகள்தோறும்) - 30.12.2025 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தேர்தல் தொடர்பான இதர அறிவிப்புகளில் மாற்றம் ஏதுமில்லை.

**கலைஞரகம்**
சென்னை - 17
நாள்- 21-11-2025.

**மு.சண்முகம்**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச.பேரவை

---

## ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை – ராஜா அன்பழகன் முன்னிலை!

# தியாகராயர் நகர் மேற்கு பகுதி இளைஞரணி அறிமுக - ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆ.மணிரத்தினம் அறிக்கை!

சென்னை,நவ.22- தியாகராயர் நகர் மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆ. மணிரத்தினம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி இளைஞரணி அறிமுக மற்றும் ஆலோசனைக் கூட்டம் இன்று (22.11.2025) சனிக்கிழமை மாலை 06:00 மணி அளவில் தியாகராயர் நகர் மேட்லி சாலையில் அருகில் இளைஞர் அணி அலுவலகத்தில் தியாகராயர் நகர் மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆ. மணிரத்தினம் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இதில் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதி கழகச் செயலாளர் கே.ஏழுமலை, சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், மாவட்டத் துணை அமைப்பாளர் எஸ்.உமா சங்கர், எ. அஸ்வின் குமார், ‘டேண்டி’ பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் வட்ட அமைப்பாளர்கள் வட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள் :இளைஞரணி பணிகள் குறித்து, நவ.27 இளைஞர் எழுச்சி நாள் குறித்து.


இறுதியில் ஜெகன், உதயகுமார், மனோஜ்குமார், ரவி பிரசாத், ரமேஷ், சரவணன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஒரத்தநாடு கு.வை.ஆண்டியப்பன்

## நவம்பர் 22 (2012)



**பகுத்தறிவுக் கொள்கைகள் கொண்ட நாடகங்களில் நடித்ததன் மூலம் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அறிமுகமாகி, பின்னர் கழகக் கொள்கைகளை பாடல்கள் மூலம் பிரச்சாரம் செய்தவர்.**

**ஒரத்தநாடு ஒன்றியக் கழகச் செயலாளராக இரண்டு முறையும் – ஒன்றிய அவைத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.**

**தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் சிறை சென்றவர். குறிப்பாக, ‘மிசா’ கைதியாக சிறையில் இருந்தபோது தனக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு சிறைச்செல்வன் என்று பெயரிட்டு மகிழ்ந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**